## எங்கே தடுப்புமருந்தளிக்கப்படுகிறது

தடுப்புமருந்தளிப்புகள் பின்வருவோரால் வழங்கப்படும்:

- குடும்ப மருத்துவர்கள் (GPs)
- அபோரிஜினி (பூர்வ பழங்குடியினர்) மருத்துவ சேவைகள்
- சில உள்ளூர் நகர சபைகள்
- சில சமூக சுகாதார மையங்கள்

உங்கள் பிரதேசத்திலுள்ள சேவைகள் பற்றி உங்களுக்கு அறிய வேண்டுமாயின் உங்களுக்கு அருகிலுள்ள **‘பொதுச் சுகாதார அல’ கினை (Public Health Unit) நீங்கள் 1300 066 055 - இல் தொடர்பு கொள்ளலாம்.**











தடுப்புமருந்தளிப்பு பற்றிய மேலதிக விபரங்களுக்கு **immunisation.health.nsw.gov.au** எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள், மற்றும் கையடக்கமான SAVE THE DATE எனும் கைத்தொலைபேசிப் பயன்பாட்டை (App) பதிவிறக்கம் செய்து அல்லது ‘தனியொரு வேலைத்திட்ட அட்டவணை’ (Personalised Schedule) ஒன்றைப் பிரதியெடுத்துக்கொண்டு தடுப்பு மருந்தளிப்புக்கான தினத்தை குறித்து வைத்துக் கொள்ளவும்.

NSW GOVERNMENT | Health

SHPN (CHP) 150351

# தாமதமின்றி தடுப்பு மருந்தளித்து நோய்கள் நெருங்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்






NSW GOVERNMENT | Health

## தகவல்கள்

உரிய காலத்தில் பூரணப்படுத்தப்படுமாயின் தடுப்பு மருந்துகள் மிகச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன. உங்கள் குழந்தை நோயுற்றிருக்கும் போது தடுப்பு மருந்து வழங்கப்படுவது தாமதிக்கப்படுவது பொதுவானதே. எனினும் அவர்களுக்கு மூக்கு ஒழுகுதல் அல்லது சிறிதளவு தடிமல் இருக்கும் வேளையிலும் தடுப்பூசி கொடுக்கப்படலாம். உரிய காலத்தில் தடுப்பு மருந்து வழங்கப்படுவதே உங்கள் குழந்தையை பாரதூரமான நோய்களிலிருந்து காப்பதற்கான மிகச் சிறந்த வழியாகும்.






## தடுப்பு மருந்தளிக்கப்படுவது ஏன்

- தடுப்பு மருந்து வழங்கப்படுவதுதான் உங்கள் குழந்தையை பாரதூரமான நோய்களிலிருந்து காப்பதற்கான மிகச் சிறந்த வழியாகும்.
- தடுப்பு மருந்து வழங்குவதன் மூலம் நீங்கள் உங்கள் குழந்தையைப் பாதுகாப்பதோடு பரந்த சமுதாயத்தையும் பாதுகாப்பீர்கள்.
- எந்த அளவுக்கு அதிகமானோர் தமது குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து வழங்குகிறார்களோ அந்த அளவிற்கு எம்மால் தடுப்பு மருந்தின் மூலம் தவிர்க்க முடியுமான பாரதூரமான நோய்களைக் கட்டுப்படுத்த இயலும்.

## எப்போது தடுப்பு மருந்தளிப்பது

பின்வரும் வயதுகளில் குழந்தைகளுக்கு தடுப்புமருந்தளிக்கப்பட வேண்டுமென நி.ச.வே தடுப்பூசித்திட்ட அட்டவணை பரிந்துரைக்கிறது.

- பிறந்ததும்
- 6–8 வாரங்கள்
- 4 மாதங்கள்
- 6 மாதங்கள்
- 12 மாதங்கள்
- 18 மாதங்கள்
- 3½–4 வருடங்கள்

உரிய காலத்தில் உங்கள் குழந்தைக்குத் தடுப்புமருந்தளிப்பது மிக முக்கியமானதாகும். எனவே நேரகாலத்துடன் உங்கள் மருத்துவருடன் அல்லது தடுப்புமருந்தளிப்பு சேவை வழங்குநருடன் சந்திப்பு வேளை ஒன்றை ஏற்பாடு செய்து தடுப்புமருந்தளிப்பதற்கான தினத்தைக் குறித்து வைத்துக் கொள்ளவும்.

SAVE THE DATE என்ற மிக இலகுவான தொலைபேசி பயன்பாடு (Phone App) ஒன்றை பதிவிறக்கம் செய்துகொள்ளவும் அல்லது உங்களுக்கென 'தனியொரு வேலைத்திட்ட அட்டவணை' (Personalised Schedule) ஒன்றை **immunisation.health.nsw.gov.au** என்ற வலைத்தளத்திலிருந்து பிரதியெடுத்துக் கொள்ளவும்.

## பக்க விளைவுகள்

தடுப்புமருந்துகள் பாதுகாப்பானதும் பயனுள்ளவையுமாகும். தடுப்புமருந்தளிப்பின் பலன்கள் அதனால் ஏற்படக்கூடுமான பாதிப்புகளைவிட மிகவும் அதிமாகும். ஆயினும், வேறு எந்தவொரு மருந்தையும் போலவே தடுப்புமருந்துகளும் சிலவேளை பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம். இவ்விளைவுகள் பொதுவாக இலகுவானதுடன் குறுகிய காலத்திற்கே இருக்கும், இவற்றில் நோவு, வீக்கம் மற்றும் ஊசி ஏற்றப்பட்ட இடம் சிவந்துபோதல் என்பன உள்ளடங்கும். பாரதூரமான பக்க விளைவுகள் மிகவும் அரிது.

சாத்தியமான பக்க விளைவுகள் பற்றி உங்களுக்கு ஏதும் கரிசனைகளிருப்பின் **உங்கள் மருத்துவருடன் அல்லது தடுப்புமருந்தளிப்பு சேவை வழங்குநருடன் பேசவும்.**



## பதிவுகளை வைத்திருத்தல்

உங்கள் குழந்தையின் தடுப்புமருந்தளிப்புப் பதிவுகளை நீங்கள் குழந்தைப் பராமரிப்பகத்திற்கும், முன்பள்ளிக்கும் மற்றும் பாடசாலையில் சேர்ப்பதற்கும் வழங்க வேண்டியிருக்கும். தடுப்புமருந்தளிப்பு வரலாற்று அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்ள நீங்கள் 'தடுப்புமருந்தளிப்புப் பதிவக' த்தை 1800 653 809 -இல் அழைக்கவும்.

